# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No.100/2022

| | | | |
|---|---|---|---|
| Name | : | ஸ்ரீராம் | Rw3 |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of March 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். 20.07.2021ல் இந்த விபத்து நடந்தது. கழுகுமலையில் இருந்து ஆலங்குளம் செல்லும் சாலையில் அவனிக்கோனேந்தல் என்ற இடத்தில் சீயோன் சர்ச் எதிர்புறம் இந்த விபத்து நடந்தது. நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடதுபுறமாக சென்று கொண்டிருந்தேன். பின்னால் டமால் என்ற சத்தம்கேட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது ஆட்டோ என் வண்டியின் பின்னால் இடித்திருக்கிறது. அந்த இடத்தில் வளைவான பகுதி இருந்தது. ஆட்டோ வேகமாக வந்ததால் என் வாகனத்தின் பின்னால் மோதியது. விபத்து வளைவான பகுதியைத் தாண்டி நடந்தது. வளைவான பகுதியில் இருந்து 100மீ தள்ளி இந்த விபத்து நடந்தது. ஆட்டோவில் இருந்தவர்களை வெளியே எடுத்துவிட்டு காவல் நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். ஆம்புலன்சுக்கும் நான் தான் தகவல் சொன்னேன். ஆம்புலன்ஸ் அரைமணிநேரத்தில்

வந்தது. அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். மறுநாள் என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நடந்த சம்பவத்திற்கு நான் தான் புகார் அளித்தேன். போலீசார் இந்த விபத்து சம்பந்தமாக என்னை விசாரித்தனர். போலீசார் விசாரணை செய்து இந்த விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநர் தான் காரணம் என்று அவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த விபத்திற்கு சங்கரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம். அவர் நினைத்திருந்தால் என்னுடைய வண்டியின் சைடில் சென்றிருக்கலாம். இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவோ, அதிவேகமோ காரணமல்ல.

**<u>4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட லோடு ஆட்டோ என்னுடையதாகும். இந்த மனுவில் என்னை 1ம் எதிர்மனுதாரராக சேர்த்து எனக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டு எனக்கு கிடைத்திருக்கிறது என்றால் அந்த அழைப்பாணையை நான் வாங்கவில்லை. மல்லிகா என்பவர் என்னுடைய மனைவி ஆவார். இந்த நீதிமன்றத்தில் இருந்து தபால் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணையை என்னுடைய மனைவி மல்லிகா பெற்றுக்கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். இந்த மனுவில் வழக்கறிஞரை வைத்து என் மீது தவறில்லை என்று நான் வழக்காடவில்லை. இந்த மனுவில் என் மீது இந்த நீதிமன்றத்தில் ஒருதலைபட்சமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நானே இந்த மனுவில் தரப்பினராக இருப்பதால் என் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்சமான உத்தரவை ரத்து செய்து எதிருரை தாக்கல் செய்து சாட்சியம் அளித்தால் தான் என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலும் என்றால் சரியல்ல. கழுகுமலையில் இருந்து அவனிக்கோனேந்தலுக்கு கட்டிடப்பணிக்காக சிமெண்ட் மூடைகளை ஏற்றிச் சென்றிருந்தேன். குறிப்பிட்ட நேரத்திற்குள் சிமெண்ட் மூடைகள் அந்த இடத்திற்கு செல்லாவிடில் கட்டிட வேலை பாதிக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடானது சங்கரன்கோவிலில் இருந்து கோவில்பட்டி செல்லும் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் வாகனங்கள் பரபரப்பாக வந்துசெல்லும் என்றால் சரிதான். பகல் நேரத்தில் அந்த இடத்தில் ஆடு, மாடுகள் மேய்ச்சல் இருக்கும் என்றால் சரிதான். இந்த

விபத்தானது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் நான் வந்து எதிரே வந்த வாகனத்தில் மோதாமல் இருப்பதற்காகவோ, அல்லது ஆடு, மாடுகள் மீது மோதாமல் இருப்பதற்காகவோ திடீரென்று பிரேக் போட்டதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு காயம்இல்லை. பின்னால் வந்த ஆட்டோவில் இருந்த ஒரு நபருக்கு தான் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நபர்களை உயிர்காக்கும் பொருட்டு சிகிச்சைக்கு உடனே அனுப்பிவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு என்னுடைய ஊர் செல்வாக்கு, அரசியல் செல்வாக்கு, பண செல்வாக்கு ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டு உண்மைக்கு மாறாக பொய் புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த மறுநாள் புகார் அளித்ததாக கூறியிருக்கிறேன். என்னுடைய வாகனத்திற்கு சேதம் குறைவாக இருந்ததால் நஷ்ட ஈடு எதுவும் கோரவில்லை. என்னுடைய வாகனத்திற்கு முறையாக பதிவுச் சான்றிதழோ, தகுதிச்சான்றிதழோ இல்லாத காரணத்தினால் தான் கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு எந்த நீதிமன்றத்திலும் விபத்து சம்பந்தமாக நான் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த விபத்திற்கு என்னுடைய அதிவேகமும், கவனக்குறைவும் தான் காரணம் என்றும், பின்னால் வந்தவர் மெதுவாகவும், நிதானமாகவும் தான் ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றும், சமய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி என் மீது குற்ற வழக்கு பதிவு செய்துவிடக்கூடாது என்பதற்காக உண்மைக்கு மாறாக நான் புகார் மனு அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் தான் என் சார்பாக இழப்பீடு வழங்கவேண்டும் என்றா,ல் சரியல்ல.

<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்து சமயத்தில் டிஎன் 79 ஜே 6176 பதிவெண் கொண்ட லோடு ஆட்டோவை நான் தான் ஓட்டிச் சென்றேன். டிஎன் 79 ஹச் 3557 பதிவெண் கொண்ட ஆட்டோவை சங்கர் ஓட்டி வந்தார். அந்த ஆட்டோவில் சொக்கலிங்கம் என்பவர் பயணியாக இருந்தார். இந்த விபத்தினால் எனக்கு ஏதும் காயங்கள் ஏற்படவில்லை. சங்கருக்கு அடிபட்டதை நான் பார்த்தேன். சொக்கலிங்கத்திற்கு ரத்தக்காயங்களை நான் பார்க்கவில்லை. சங்கரும், சொக்கலிங்கமும் 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்கு சென்றார்கள். நான் ஆம்புலன்சுடன் செல்லவில்லை. என்னை காவல்நிலையத்திற்கு

வரச்சொன்னார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை. திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சங்கருக்கு அறுவை சிகிச்சை நடந்ததாக கேள்விப்பட்டேன். 20.07.2021ல் விபத்து நடந்தது. 21.07.2021ல் 12.00 மணிக்கு நான் புகார் அளித்தேன். நான் புகார் அளிக்கும் போது சங்கர் மருத்துவமனையில் இருந்ததாக கேள்விப்பட்டேன். சங்கர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சையில் இருந்ததால் புகார் அளிக்கவில்லை என்றும், இல்லாவிடில் அவர் புகார்அளித்திருப்பார் என்றால் சரிதான். குருவிகுளம் காவல் நிலையத்திற்கு சென்று நான் தான் புகார் அளித்தேன். குருவிகுளம் காவல் நிலையத்தில் என்னிடம் என்ன வாக்குமூலம் பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் போலீசார் எழுதி வைத்திருந்தார்கள். என்னிடம் கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் போட்டேன். என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியாமல் தான் நான் கையெழுத்திட்டிருக்கிறேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கும், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் சென்றதாக கூறப்பட்டிருக்கிறது என்றால் நான் அங்கு செல்லவில்லை. மறுநாள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அவர் அங்கு இல்லை. அதனால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றால் நான் வேகமாக செல்லவில்லை. சிமெண்ட் லோடு ஏற்றிச்சென்றேன். 30 மூடைகள் இருந்தது. சிமெண்ட் மூடைகள் அதிகம் இருந்ததால் நான் சிரமப்பட்டு தான் ஆட்டோவை ஓட்டினேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி வந்த வாகனத்திற்கும், சங்கர் ஓட்டி வந்த ஆட்டோவிற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருந்தது என்று எனக்கு தெரியாது. சங்கர் ஓட்டி வந்த ஆட்டோவிற்கு முன்பாக நான் சென்றதால் அவர் வேகமாக வந்தாரா, மெதுவாக வந்தாரா என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி வளைவைத் தாண்டிய பகுதியாகும். சங்கர் ஓட்டி வந்த வாகனம் 3 சக்கர வாகனம் என்றால் சரிதான். வளைவுப்பகுதி என்பதால் ஆட்டோ 40கி.மீ வேகத்தில் தான் வரமுடியும் என்றால் இருக்கலாம். அவர் மெதுவாகத்தான் வந்தார் என்றால் 40கி.மீ வேகத்தில் வந்திருக்கிறார். நான் 50 கி.மீ வேகத்தில் சென்றுகொண்டிருந்தேன். சங்கரால் இந்த விபத்து ஏற்படவில்லைஎன்றும், என்னால்

தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் 2 வாகனங்கள் ஈடுபட்டுள்ளது என்றும், சங்கர் மருத்துவமனையில் இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு நான் புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது கிரிமினல் வழக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் காவல் நிலையத்திற்கு சென்று பொய்யாக புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.03.13 17:04:50 +0530